தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 127

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: ஐப்பசி 25௳ செவ்வாய் (10—11—53) ☆ ☆ ★ வெளியூர்: ஐப்பசி 26௳ புதன் (11—11—53)


# புதிய கல்வி திட்டத்திற்கு காங்கேயம் வாக்காளர் கொடுத்தத் தீர்ப்பு!

## மக்களாட்சி முறைப்படி திட்டத்தைக் கைவிட சி. ஆர். முன்வருவாரா?

## ஆச்சாரியார் அடக்குமுறை ஆட்சியை மக்கள் ஒப்பவில்லை!

### தி.மு. கழக தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

ஈரோடு, நவ. 9—

சென்னை சட்டசபைக்கு காங்கயம் தொகுதியில் நடந்த துணைத் தேர்தலில், காங்கிரஸ் அபேட்சகர் சுப்பாராய கவுண்டர் தோல்வியடைந்தார். போட்டியிட்ட அபேட்சகர் கே. ஜி. பழனிச்சாமி கவுண்டர் வெற்றிவாகை சூடினார்.

கே. ஜி. பழனிச்சாமி கவுண்டருக்கு 14,961 வாக்குகளும், சுப்பராய கவுண்டருக்கு 14,950 வாக்குகளும் கிடைத்தன. 3 ஓட்டுகள் செல்லுபடியாகவில்லை.

ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கையின்பேரிலேயே கே. ஜி பழனிச்சாமி கவுண்டர் போட்டியிட்டார்.

இந்தத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரான சுப்பாராயக் கவுண்டருக்காக சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார் மின்னல் வேகத்தில் சுற்றுப் பயணம் செய்து பிரச்சாரம் நடத்தினார். மற்றும் இராஜாராமர், சுப்ரமணியம், காமராஜர் ஆகியோரும் அந்த வட்டாரத்தில் பேசினர். எனினும் காங்கிரஸ் மண் கவ்விற்று; கே. ஜி பழனிச்சாமிக் கவுண்டர் வெற்றி பெற்றார்.

## உங்களுக்குத் தெரியுமா?

புதுடில்லி, நவ 9—

இந்நாட்டில், ரப்பர் செருப்புகள், பூட்சுகள் ஆகியவைகளைத் தயாரிக்கும் 23 தொழிற்சாலைகள் உள்ளன; ஒவ்வொன்றிலும், 100க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். சென்ற ஆண்டில், ரப்பர் செருப்புகள், பூட்சுகள் 2 22 39 511 ஜோடிகள் செய்யப்பட்டுள்ளன.

வடமேற்கு இந்தியாவிலுள்ளவர்கள்தான் பாதரட்சைக்காக அதிகம் செலவிடுகின்றனர். ஒரு ஆண்டில் சராசரி, வடமேற்கு இந்தியர் ரூ. 5—6—0 இதற்காக செலவிடுகின்றனர்; ஆனால் தென்னிந்தியர் ஒரு ஆண்டில், பாதரட்சைக்காக செலவிடுவது 9 அணாதான்.

## திருச்சி அதிகாரிகளின் ஓரவஞ்சனை

### 'நீங்கள் சர்க்காரைத் திட்டுவீர்கள்' என்று கூறி தி. மு. கழக கூட்டத்திற்கு அனுமதி தர மறுப்பு!

திருச்சியில் டவுன் ஹால் மைதானத்தில் 8—11—53-ம் தேதி தி. மு. கழகக் கூட்டம் நடத்துவதற்காக 26-10-53-ம் தேதி திருச்சி ரெவின்யூ டிவிஷனல் ஆபீசரிடம் அனுமதி கோரப்பட்டது. திரும்ப 4—11—53-ந் தேதி ஆர்.டி.ஓ அவர்களிடம் நேரில் சென்று அனுமதி கேட்டபோது, மறுத்து விட்டார்.

"அதற்கு முதல் வாரம், கம்யூனிஸ்டு கூட்டத்திற்கு அனுமதி கொடுத்தீர்களே?" என்று கேட்டதற்கு, "உங்களுக்குத் தர முடியாது; நீங்கள் அரசாங்கத்தை தாக்கிப் பேசுகிறீர்கள்" என்றார்.

"அனுமதி தர முடியாது, என, எழுத்து மூலமாகப் பதில் கொடுங்கள்," என்று கேட்டதற்கு, "தபாலில் அனுப்புகிறேன்," என்று சொல்லி இதுவரையில் பதில் அனுப்பவில்லை.

மேற்படி ஆர். டி. ஓ. அவர்கள்தான் டால்மியாபுரம் வழக்கை விசாரணை செய்கிறார்.

புதுடில்லி, நவ. 10—

இந்தியப் பள்ளிகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிப்பதை அனுமதிப்பது உசிதமா என்ற விஷயம் இங்கு கூடியுள்ள கல்வி போர்டு கூட்டத்தின் முன் ஆலோசனைக்கு வருமாம்.

## மாணவர்களிடம் சிக்கி மந்திரி திணறிப் போனார்

### லட்சுமணபுரி மாணவர்களின் ஆர்ப்பாட்டம் அதிகரிக்கிறது

லக்னோ, நவ. 10—

ஆத்திரமடைந்த மாணவர்களில சிலர், நேற்று மாலை உணவு மந்திரியான சி. பி. குப்தாவை பல்கலைக் கழக வளைவுக்குள் சூழ்ந்து கொண்டு தொல்லை கொடுத்தனர். அவர் ஏறிவந்த 'மோட்டார்' மீது கற்களை வீசி எறிந்தனர். அதனால் பலகணியின் கண்ணாடியும், முன் பக்கம் உள்ள தலை விளக்குகளும் நொருங்கின என்று சொல்லப்படுகிறது.

காரின் முன்புறத்தில் பறந்துகொண்டிருந்த தேசியக் கொடியையும் மாணவர் பிடுங்கி எறிந்துவிட்டு, குறுக்கிட்ட போராட்டக் குழு மாணவத் தலைவரையும் தாக்கினர் என்றும் தெரியவருகிறது.

இதற்கு முன்னதாக, இதே அமைச்சரை, கானிங் கல்லூரி மன்றத்தில் மாணவர்களுக்கு அரை மணி நேரம் போதனை புரிந்தபிறகு, வெளியேற விடாமல் எல்லா வாயிற் கதவுகளையும் அடைத்துத் தொல்லை கொடுத்தனராம் மாணவர்கள்.

இறுதியில் எப்படியோ அமைச்சரை, வேறு ஒரு 'மோட்டாரில்' ஏற்றி, அவருடைய வீட்டிற்கு 'பத்திர'மாகக் கொண்டு சேர்க்கப்பட்டார் என்று சொல்லப்படுகிறது.

## 'காங்கிரஸ் கலகலத்துக் கிடக்கிறது'

— (:) —

## "திராவிடர்கள்தான் தென் இந்தியாவின் தொடக்கக் கால பழங்குடிகள்"

### "வட நாட்டை ஆளுகிறவர்கள் ஆரிய படை எடுப்பாளர்களே"

### 'வட நாட்டு ஏகாதிபத்தியம்' என்ற நினைப்பு, முன்னரே நிலைத்திருக்கிறது"

★

"தென் இந்தியாவில், கடந்த பொதுத் தேர்தலில் ஆச்சரியப்படும் வகையில் வெற்றிபெற்ற கம்யூனிஸ்டுகளால், இப்பொழுது புதிய காரியங்கள் எதையும் சாதிக்க இயலவில்லை."

"திரு. ராஜகோபாலாச்சாரியாரின் ஆட்சியை எதிர்த்து திராவிடர்கள் நடத்தும் கிளர்ச்சி தென்னிந்தியாவில்கூட காங்கிரசின் பிடிப்பு எவ்வளவு கலகலத்துப் போயிருக்கிறதென்பதைக் காட்டுகிறது."

"இன வரலாற்றுப்படி சொல்லவேண்டுமானால், இன்று வடநாட்டை ஆளுகிற, ஆரிய படையெடுப்பாளர்களிலிருந்து வேறுபட்ட, திராவிடர்கள்தான் தென்னிந்தியாவின் தொடக்ககால பழங்குடிகள்."

"தமிழ், தெலுங்குமொழி பேசுகிற தென்னிந்தியர்கள் மீது தேசிய மொழியான இந்தியை கட்டாயமாக திணிக்க முயல்வதை ஏற்கனவே குற்றம் சாட்டியுள்ள திராவிடர் இயக்கம், இராஜகோபாலாச்சாரியாரால் கொண்டுவரப்பட்டுள்ள ஒரு புதிய கல்வித் திட்டத்தை தீவிரமாக எதிர்த்து வருகின்றது."

"ஏற்கனவே தென்னிந்தியாவில் நிலவுகிற, 'வடநாட்டு ஏகாதிபத்தியம்' என்ற எண்ணத்தைச் சாதகமாக திராவிட இயக்கம் பயன்படுத்திக் கொள்கிறது."

"அதிருப்தியை தெரிவித்துக்கொள்ள திராவிடர்கள் ஒரு சில புகைவண்டித் தொடர்களை நிறுத்தினர். தோழர் நேரு இதை, சிறுபிள்ளைத்தனமானதென்று வர்ணித்ததோடு, இந்தியர்கள், இம்மாதிரியான பண்பற்ற அரசியல் நடவடிக்கைகளை, கைவிட்டுவிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்."

"ஆனால் அதற்குப் பதிலாக, நேருவின் துன்புறுத்தும் வார்த்தைகளை எதிர்க்கும் வகையில், எண்ணற்ற புகை வண்டிகள் நிறுத்தப்பட்டன."

"இந்திய அரசியலில், பலாத்காரமும் குழப்பமும் மிகத் தயாரான ஆயுதங்களாயிருக்கின்றன. காங்கிரஸ் இன்னும் சிதைவுறுமானால் அவைகளின் உபயோகம் இன்னும் சந்தேகமற உயர்ந்தாலாகலாம்."

—[பிரிட்டிஷ் காமன்வெல்த் விவகாரங்களை [illegible] மூன்று திங்களுக்கு ஒரு முறை லண்டனில் இருந்து வெளிவரும் 'வட்ட மேஜை' (Round Table) என்ற 1953 செப்டம்பர் இதழில் 'இந்தியா—காங்கிரஸ் பிடி [illegible]' (India — The Congress losses ground) என்ற [illegible]

## ஐவர் சிறையில்

இன்று

## 71-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்:அண்ணதுரை

சென்னை : 10—11—1953 செவ்வாய்


# சபாஷ்! காங்கயம்!!

யானை வந்துவிட்டது! பானைதான் வரவிருக்கிறது என்பதை, மணியோசை முன்னரே தெளிவாக அறிவித்து விட்டது. சென்ற நான்கு தினங்களுக்கு முன்னரே. காங்கயம் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் தோற்பது நிச்சயம் என்று நாம் உறுதியளித்திருந்தோம். காங்கிரஸ் அமைச்சர்களும் தங்கள் கட்சியின் தோல்வி நிச்சயம் என்பதை முன்கூட்டியே தெரிந்துதான், ஆதரவு பிரசாரத்தின் போதே முகாரி பாடி விட்டார்கள் என்பதையும் நாம் எடுத்துக் காட்டி இருந்தோம்.

நாம் எதிர்பார்த்தபடியும், காங்கிரஸ் அமைச்சர்கள் எதிர்பார்த்தபடியும் காங்கயம் தொகுதியில் காங்கிரசுக்குத் தோல்வி கிடைத்திருக்கிறது. காங்கிரசை எதிர்த்து நின்று வெற்றிபெற்ற தோழர் கே. ஜி. பழனிச்சாமி அவர்களை நாம் பாராட்டுகிறோம். அவர் வெற்றிக்கு உழைத்த எல்லாத் தோழர்களும் பொதுமக்கள் வாழ்த்துக்கு உரியவர்களே. அவரை ஆதரித்த வாக்காளர்கள் அனைவரையும் நாம் போற்றுகிறோம்.

அமைச்சர் ஆச்சாரியாரின் வருணாஸ்ரமக் கல்வித் திட்டம் தேவையா, இல்லையா என்பதையே தேர்தல் பிரசனையாக வைத்து, வெற்றிபெற்றத் தோழர், தேர்தலுக்கு நின்றார் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட எல்லா தோழர்களுமே, புதிய திட்டத்தின் கேடுகளை விளக்கிக் கூறி, வாக்காளர்களின் ஆதரவைக் கோரியிருக்கிறார்கள். வாக்காளர்களும், காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடிப்பதின்மூலம், ஜாதித் தொழிலை வலியுறுத்தும் கல்வித் திட்டத்தை வெறுத்து, ஒதுக்கித் தள்ளியிருக்கிறார்கள். காங்கிரசைச் சேர்ந்தவரின் தோல்வி இந்த உண்மையைத்தான் விளக்கமாக்குகிறது.

வாக்காளர் முன், வைக்கப்பட்ட எல்லாப் பிரச்னைகளிலும் முதன்மையானது, முக்கியமானது கல்வித் திட்டப் பிரச்னை. இது நீங்கலாக, வேறு பல முக்கியமான பிரச்னைகள் குறித்தும் தேர்தல் பிரசாரத்தில் பேசப்பட்டுள்ளன. நமது தி. மு கழகத் தோழர்களும், பொறுப்பாளர் தோழர் கோவிந்தசாமி அவர்களும், தங்கள் தேர்தல் சொற்பொழிவுகளில், ஆச்சாரியார் சர்க்காரின் அடக்குமுறைகளைக் குறித்துக் கண்டித்துப் பேசி, வாக்காளர்களின் முடிவுக்கு விட்டிருக்கிறார்கள். ஆச்சாரியார் சர்க்கார் தொடுத்துள்ள தூத்துக்குடி சதி வழக்குக் குறித்தும், சிறையில் தள்ளப்பட்டு வேதனை அனுபவித்துக்கொண்டு இருக்கும் கழகத் தலைவர்கள் பற்றியும், விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன, காங்கயம் வாக்காளர்களின் நல்ல தீர்ப்புக்கு. காங்கிரசைத் தோற்கடித்து, நமது ஆதரவாளருக்கு, வாக்களித்து ஆதரித்ததின் மூலம், ஆச்சாரியார் சர்க்காரின் அடக்குமுறைப் போக்கை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள், காங்கயம் வாக்காளர்கள்.

காங்கயம் வாக்காளர்கள் கொடுத்தத் தீர்ப்பை மதித்து, அடக்குமுறை வெறியைத் தொலைத்துத் தலைமுழுகி, நல்லதோர் நடைமுறையை மேற்கொள்ள அமைச்சர் ஆச்சாரியார் முன்வர வேண்டும்.

மக்களாட்சி முறைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற நல்லறிவு, இந்தச் சூழ்நிலையிலாவது தம்முள்ளத்தைத் தொட்டிருக்கிறது என்று உலகுக்கு உணர்த்த, அமைச்சர் ஆச்சாரியார் அவர்கள், காங்கயம் தேர்தல் முடிவை மதித்த நடக்க வேண்டும். அவருடைய ஜனமகூறு ஜனநாயகத்துக்குப் புறம்பானது என்பதை அனைவரும் அறிவர். இருந்தாலும், அவருக்குள்ள அரசியல் நெருக்கடியை நோக்கும்பொழுது, இந்த வேளையிலாவது மக்களாட்சியைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும் என்ற நல்ல புத்தி ஆச்சாரியாருக்கு ஏற்பட்டு இருக்கக்கூடும் என்று நாம் நினைப்பதில தவறு ஒன்றுமில்லை.

"அவர்கள் தேர்தலில் வெற்றி பெற்று காங்கிரசைத் தோற்கடித்தால், காங்கிரஸ் மந்திரி சபை பதவியிலிருந்து விலகிவிடும்."

இந்த விளக்கத்தைக் கூறியது அமைச்சர் ஆச்சாரியார் தான். இப்படி இரண்டு திங்களுக்குமுன் திருவொற்றியூரில அவர் பேசியிருக்கிறார். எதிர்க் கட்சியினருக்கு அறிவுரையாக அவர் கூறியிருக்கிறார் அன்று.

சட்டசபையில் பெருமபான்மையான இடங்களை நமது தி.மு.கழகமும், அதன் தொடர்பு கொண்டவர்களும் பிடித்து, காங்கிரஸ் சிறுபான்மை இடங்களைக் கைப்பற்றினால, பெரும்பான்மையினர் ஆட்சிப பொறுப்பேற்பதும், சிறுபான்மை காங்கிரஸ் கட்சி 'பல்லெல்லாம புளிக்கும' என்று நியாயம் பேசுவதும் மக்களாட்சி முறைக்கு மாறுபட்டது அல்ல. ஆனால் காங்கிரஸ் நடைமுறை வரலாறுதான், இந்த அடிப்படைக்கு மாறுபட்டுக் கிடப்பதாயிற்றே! கவர்னர் பெருமான் துணை வைத்தால் சிறுபான்மையினர் ஒரே இரவில் பெரும்பான்மையினராக மாறிப் பதவி யேற்கும் கறை படிந்த அரசியல் வரலாறுதானே நம்முடைய சென்னை மாநில வரலாறு? ஆச்சாரியார் அமைச்சர் குழு அந்த ரகத்தில் உருவாகி உருத்திர நடனம் புரிந்து வருவதுதானே? நிற்க,

அமைச்சர் ஆச்சாரியார் அறிவுரைப்படி. தேர்தலில் நாமும் கலந்துகொண்டு, பெரும்பான்மையாக சட்ட சபை உறுப்பினர்களாகி ஆட்சி அமைக்கும் விஷயத்தை, வரும் பொதுத் தேர்தலில் பார்த்துக்கொள்ளுவோம இந்த நடைமுறையையும், ஆச்சாரியார் தனது ஆயுள்காலததிலேயே, விழி பிதுங்கக் காணத்தான்போகிறார். இதில் துளியும் ஆச்சாரியாருக்குச் சந்தேகமே தேவை இல்லை என்பதை இப்பொழுதே அறிவித்துவிடுகிறோம்.

காங்கயம தேர்தலில், ஆச்சாரியார் அவர்களின் வர்ணாஸ்ரமக் கல்வித் திட்டத்திற்குத் தோல்வி ஏற்பட்டு இருக்கிறது. மக்களாட்சி முறைப்படி திட்டத்தை அவர் வாபஸ் வாங்கியாக வேண்டும். இதைத்தான் காங்கயம் வாக்காளர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

காங்கயம் வாக்காளர் விருப்பப்படி, தூத்துக்குடி சதி வழக்கையும், டால்மியாபுரம் வழக்கையும, ஐவர்மீது புதிதாகத் தொடுத்துள்ள ரிவிஷன் மனுவையும அமைச்சர் ஆச்சாரியார் உடனடியாக வாபஸ் பெற்றாக வேண்டும். வழக்குகளைத் திரும்பப் பெறுவதோடு, வழக்குகளில் சம்பந்தப்படுத்தப்பட்டு, சிறையில் தள்ளப்பட்டுள்ள தோழர்கள் அனைவரையும் நிபந்தனை எதுவுமில்லாமல் விடுதலை செய்தாக வேண்டும்.

இவ்வளவையுந்தான் காங்கயம் தேர்தல் முடிவு, கட்டளையாக ஆளவந்தார்களுக்குக் கொடுத்திருக்கிறது. அமைச்சர் ஆச்சாரியார், காங்கயம் தீர்ப்புக்கு செவிசாய்த்து, ஜனநாயக வழி திரும்புவாரா அல்லது கல்வித் திட்டத்தை 'நிறுத்தி வைக்க' என்ற சட்டசபை ஆணையை, 'எம்மைக் கட்டுப்படுத்தாத வெறும் சிபாரிசு' என்று தட்டிக்கழித்து நடந்ததுபோலவே, காங்கயம் முடிவையும் புறக்கணித்து நடப்பாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

இனி நடைபெற வேண்டிய விவகாரம் எப்படி இருந்தாலும், காங்கயம தேர்தல் ஆச்சாரியார் ஆட்சிப் போக்கைக் கண்டித்துத் தீர்ப்பளித்துவிட்டது. இது கண்டு, சபாஷ்! காங்கயம்! என்றுதான் அனைவரும் கூறுவார்கள்,

# ஐவர் வழக்கில் சர்க்கார் அப்பீல்

## உயர்நீதி மன்றம் ஒப்புக்கொண்டது

NEPT, சென்னை, நவ. 9—

சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிபதி பி. வி. பாலகிருஷ்ண அய்யர் முன்னிலையில், ஐவர் வழக்கில் மாகாண முதல் மாஜிஸ்திரேட் கொடுத்துள்ள தீர்ப்பில் கூறியுள்ள தண்டனையைக் காட்டிலும் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும் என்று கோரி, சென்னை சர்க்கார் சார்பில தோழர் வீ. சி. முத்தன்னா அவர்கள் ஒரு ரிவிஷன் மனுவைக் கொடுத்தார்.

வழக்கின் தாராதரத்தையும் விளைவுகளையும் பார்க்க தீர்ப்பளித்த மாஜிஸ்திரேட் தவறிவிட்டார் என்றும், மாஜிஸ்திரேட்கொடுத்துள்ள தண்டனை மிகமிகக் குறைவாக இருக்கிறது என்றும், குற்றவாளிகள், தங்களுடைய செயலின் விளைவுகளைத் தெரிந்தே குற்றம் புரிந்திருக்கிறார்கள் என்றும், ஆதலால், கடுமையான தண்டனைகளை மாஜிஸ்திரேட் குற்றவாளிகளுக்குக் கொடுத்திருக்க வேண்டும் என்றும், எனவே, நிலைமையை சீர் தூக்கிப் பார்த்து தண்டனையைக் கூடுதலாக்கவேண்டும் என்று சர்க்கார் வழக்கறிஞர் சர்க்கார் சார்பில் குறிப்பிட்டார்.

சர்க்கார் சார்பு வாதத்தை ஏற்றுக்கொண்டு, குற்றவாளிகளுக்கு அறிக்கை யிடவும், குறறவாளிகள் சார்பில் செய்யப்பட்டுள்ள அப்பீலையும் ஒன்றாக விசாரிப்பதாகவும நீதிபதி அறிவித்தார்.

## அதிகாரிகளின் பொய்வழக்கு அம்பலம்

### மாயவரம் தோழர்கள் நிரபராதிகளென விடுதலை

மாயவரம், நவ. 8—

3—11—53ல், தஞ்சை தனி ரயில்வே மாஜிஸ்திரேட் முன்னிலையில், மாயூரம் தோழர்கள் கே. அருணாசலம், செல்வராஜ் பாலசுப்பிரமணியம், நாகரத்தினம் ஆகியோர்மீது, ரயில் சங்கிலியை இழுத்ததாகத் தொடரப்பட்டிருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

போலீஸ் தரப்பு மனுவில் மாயவரத்துக்கும், சீருக்கும் இடையில் என்று கூறப்பட்டிருந்தது. கார்டு சொன்ன சாட்சியத்தில், வைத்தீஸ்வரன் கோவிலுக்கும் சீர்காழிக்கும் இடையில் என்று சொன்னார். இந்தக் குழப்பத்தால், இது உண்மையான வழக்காயிருக்காதென்று மாஜிஸ்திரேட் கூறி அனைவரையும் விடுதலை செய்து வழக்கை தள்ளுபடி செய்துவிட்டார்.

தோழர்களுக்காக தஞ்சை பிரபல வழக்கறிஞர் டி. சாமிநாதன் அவர்கள் வாதாடினார்.

### அரிசி உற்பத்தி அதிகரிப்பு

கராச்சி, நவ. 10—

சென்ற 6 ஆண்டுகளில், கிழக்கு பாகிஸ்தானில் அரிசி உற்பத்தி அதிகரித்துள்ளது. 20,00,000 ஏகராக்களில் அதிகமாக அரிசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது இந்த காலத்தில், 13 லட்சம் ஏகராக்கள், அதிகமாக சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

1953—54ல், அரிசி உற்பத்தி அதிகமாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

—ரேபன்.

★★★★★★★★★★★★

## கல்லக்குடி அறப்போர்

★

இன்று

## 120-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று

## 119-வது நாள்

★★★★★★★★★★★★

## சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்

### 53 புதிய தொகுதிகளுக்கு அங்கீகாரம்

புதுடில்லி, நவ 9—

இன்னும் 53 சமுதாய அபிவிருத்தித் திட்டத் தொகுதிகளுக்கு திட்டக் கமிஷன் சமீபத்தில் அங்கீகாரம் அளித்திருக்கிறது; அவை சம்பந்தமான வேலை உடனடியாக ஆரம்பிக்கும். இத் தொகுதிகள் 19 மாகாணங்களில், பரவிக் கிடக்கின்றன; அவை 5,300 கிராமங்களுக்கு வியாபிக்கும்; அவைகளின் மூலம் 40 லட்சம் பேர் பயன் பெறுவார்கள்.

இத்திட்டத்தில், 456 தொகுதிகள் அடங்கியிருக்கின்றன; அவைகளில் 217 சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் மூலமும் மீதி 239 தேசிய விஸ்தரிப்பு திட்டத்தின் பிரகாரமும் பலனடைகின்றன. பலன் பெறும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை 44 600 ஆகும்; பலன்பெறும் மக்களின் எண்ணிக்கை 3,72,20,000 பேராகும்.

இப்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள 53 புதிய தொகுதிகளுக்கும் பிடிக்கும் செலவு 7,95 கோடி ரூபாயாகும்; இத்தொகை மூன்று ஆண்டுகளில் செலவிடப்படும்.

இத் திட்டப்படி, சென்னை மாநிலத்தில், செங்கல்பட்டு ஜில்லாவில். செங்கற்பட்டு தொகுதி;

திருநெல்வேலி ஜில்லாவில், அம்பாசமுத்திரம் தொகுதி;

தென்னார்காடு ஜில்லாவில், சிதம்பரம தாலுகா;

மதுரை ஜில்லாவில், திண்டுக்கல், நிலக்கோட்டை தாலுகாக்கள் ஆகிய நான்கு அபிவிருத்தித் தொகுதிகள் ஏற்படும்.

டமாஸ்கஸ், நவ. 10—

எகிப்தின முன்னாள்ராணி நரிமன் தலாக்கால் தன்மீதுகொண்டுவரவிருக்கும் வழக்கில், தனக்காக ஆஜராக பிரபல சிரிய வக்கீல் இஷான் ஷெரீப் என்பவரை முன்னாள் மன்னர் பாரூக் அமர்த்தியிருக்கிறார் அவர் சீக்கிரமே கெய்ரோ செல்கிறார்.

## பொதுக் கூட்டம்

★

### சென்னை

11—11—53 புதன் மாலை

இடம்: பார்த்தசாரதி நாயுடு தெரு, சேப்பாக்கம்

தலைவர்: கா. அப்பாதுரை

பேசுவோர்:

டி. வி. நாராயணசாமி

வி. எஸ். கோவிந்தராசன்

முகவை ஜே. எல். பாண்டியன்

# பார்ப்பனீயக் கொடுமையினடியாகவே நீதிக்கட்சி தோன்றியது

## சி. பி. ராமசாமி அய்யரின் அரசியல் திருவிளையாடலின் சொல்லோவியம்

### திருவாங்கூர் பற்றி மேலும் தெளிவு தேவைப்படுகிறது

## ஆராய்ச்சியாளர் கண்ணில் தென்னாட்டு வரலாறு!

### 'காரவான்' என்ற ஆங்கில மாத இதழில் கே. ஜே. ஜேகோப் என்பவர் எழுதியுள்ள கட்டுரையின் சில பகுதி

"பார்ப்பனரல்லாதார் இயக்கம் தவிர்க்க முடியாததுதான். பார்ப்பனர்களின் கொடுமை இந்தியாவின் மற்றெந்த பாகத்தையும்விட தென்னிந்தியாவிலதான் மிகுதியும் உணரும்படியாக இருக்கிறது. இங்கு பார்ப்பனர்கள் நூற்றுக்கு மூன்று பேராக இருந்தும் அவர்களது வர்ணாசிரமத்தாலும், அரசியல் ஆதிக்கத்தாலும் கொடுமைப்படுத்தப்பட்ட மற்ற ஜாதி இந்துக்களும், கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் ஒன்று கூடி அமைத்ததுதான் ஜஸ்டிஸ் இயக்கம். பெரும் அலைபோல் பார்ப்பனீய ஒழிப்பு சக்தி திரண்டாலும், பார்ப்பனர்கள், பல ஆண்டுகளாக மற்றவரை அடக்கி வாழ்ந்த முறையை நிலைநாட்டத்தான் பாடுபடுகிறார்கள்."

"தென்னிந்திய பார்ப்பனர்கள் பல ஆண்டுகள் காலமாகவே மற்ற மக்கள் கூட்டத்திலிருந்து விலகி வாழ்ந்து வந்ததோடு, மற்றவர்களோடு சமுதாயத் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை."

"தென்னிந்தியாவில் பல பாகங்களில் பார்ப்பனர்கள் தங்களுக்கென்று தனித்தனிக் கிராமங்கள் அமைத்துக்கொண்டு மலான்களும் மடங்களும் கனவில்கூட கருதி இருக்க முடியாத அளவிற்கு ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். பிறர் எள்ளி நகையாடக்கூடிய அளவிற்குத் தீண்டாமையை வளர்த்து வந்தார்கள். அறிவையே தங்கள் பரம்பரைப் பட்டயமாகக் கொண்டிருந்த காரணத்தால் பார்ப்பனரல்லாதார்களைவிட அவர்கள் கலவிக் கேள்விகளில் சிறந்து விளங்கியதோடு, ஆட்சியில் எவர் இருந்தபோதிலும் அவர்களுக்குச் சிறந்த ஊழியம் செய்துவந்தனர்."

"நிர்வாகப் பதவிகளில் அவர்கள் நீண்ட காலம் ஏகபோக மிராசு செலுத்த இது ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது. அது போலவே தொழிற் கலலூரிகளிலும் பெருவாரியாகப் புகுந்து தேர்ச்சி பெற்று அந்தத் துறைகளிலும் செல்வாக்கு பெற்றனர். அரசியல் துறையிலும், அரசியல் அல்லாத சமுதாயத் துறையிலும் ஆக இரண்டிலும் அவர்களுக்கு இருந்த செல்வாக்கும், தனிப்பட்ட உயர்ச்சியும், இறுமாப்பும் மற்ற மக்களை மூச்சுவிட முடியாமல் திணறச் செய்தது. அங்ஙனம் அடக்கியுற்ற மக்கள் காட்டிய வெறுப்பும், கொண்ட அதிருப்தியும், அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகளும் முற்றி வெடித்துக் கடைசியாக ஜஸ்டிஸ் கட்சியாகத் தோற்றமளித்தது."

"பார்ப்பனர்களின் கொடுமைகளுக்கு ஆளாகி அல்லலுற்ற ஜாதி இந்துக்களும், கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் ஒன்று திரண்டனர். இவர்களது உள்ளக் கிடக்கையைத்தான் ஜஸ்டிஸ் கட்சி பிரதிபலித்தது. அங்காளில் ஜஸ்டிஸ் கட்சி தென்னிந்திய அரசியலில் சிறந்த இடம் பெற்றது. இந்தக் கட்சி ஏற்பட்டதின் காரணமாகத்தான் தென்னாட்டில் இந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டது. இது மாதிரியான காரணங்களினால்தான் இந்து—முஸ்லிம் என்ற வேற்றுமை மனப்பான்மை மற்ற பாகங்களில் ஏற்பட்டதைப்போல தென்னாட்டில் ஏற்படவில்லை.

சென்ற பல ஆண்டுகளாக திராவிடஸ்தான் இயக்கம் தென்னிந்திய அரசியலில் முதன்மை பெற்று வருகின்றது. வட இந்தியாவிலுள்ள ஒரு சிலருக்குத்தான் இதில் உள்ள சிக்கல் தெரியக்கூடும். இந்த இயக்கம் தென்னாடு பூராவும் தெரியுமென்றாலும் தமிழ் நாட்டில்தான் மிகவும் வலிமை பெற்றிருக்கிறது.

திராவிடஸ்தான் இயக்கம், தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு பேசும் மக்களைக் கொண்டு, மத்திய அரசாங்கத் தொடர்பு இல்லாமல் தனி ஆட்சி அமைய வேண்டுமென்று பாடுபடுகின்றது. தென்னிந்திய பெருமக்கள் ஆதிகாலத்தில் மத்தியதரைக் கடல் பகுதியில் நாகரீகத்தை ஏற்படுத்திய திராவிடக் குழுவைச் சேர்ந்தவர்கள். ஆரியருக்கு முன்னதாகவே நாகரீகத்தின் உச்சியை அடைந்தவர்கள் திராவிடர்கள். அவர்கள் தங்கள் பழமையை எண்ணிப் பெருமை கொள்ளுகிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியின் பார்ப்பனரலலாதார் இயக்கம் தென்னிந்திய காங்கிரஸ்காரர்களின் அந்தஸ்தையில் இடம் பெறவே அவர்கள் காங்கிரசின் தலைமை பதவியில் ஒரு பெரும் மாறுதலை உண்டாக்கினர்.

இன்றைய தினம் பார்ப்பனரல்லாதார்தான் காங்கிரசை நடத்தி வருகின்றனர். இல்லையெனில், விஜயராகவாசாரி, சீனிவாச அய்யங்கார், பிரகாசம், பட்டாபி சீதாராமையா, சத்யமூர்த்தி, ரெங்கசாமி அய்யங்கார், ராஜகோபாலாச்சாரியார் போன்ற காங்கிரசை வளர்க்கப் பாடுபட்ட பார்ப்பனர்களுக்கு அல்லாத சிறப்பு சாதாரண படிக்காத

குடியானவராகிய காமராச நாடாருக்கு சென்ற பதினைந்து ஆண்டுகளாகக் கிடைத்திருக்க முடியுமா?

தென்னிந்தியாவிலுள்ள அவ்வளவு பார்ப்பனர்கள் உடலிலும் ஆரியர்களின் சுத்த ரத்தம் ஓடவில்லை. 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ராமானுஜாச்சாரி என்ற மதகுரு இந்துக்கள் பலருக்கு பூணூல் அணிவித்ததின் காரணமாக. அதன் வழி வந்தவர்கள் எல்லோருமே தங்களைப் பார்ப்பனர்கள் என்றே கூறிக்கொள்ளுகிறார்கள். ஆகவே யாரும் தங்களை வடநாட்டிலுள்ள ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று நம்பவோ, கூறிக்கொள்ளவோ மாட்டார்கள்

கேரளத்தில் நிலைமை வேறு விதமாக இருந்தது. கேரளத்தில் வசிக்கும் நம்பூதிரி பார்ப்பனர்கள் கண்பமும், தாராள மனப்பான்மையும் உடையவர்களாக இருந்தமையால், ஜாதிப் பாகுபாடு இருந்தபோதிலும். அங்குள்ளவர்கள், அவர்களை மதிப்போடு நடத்திவந்தார்கள். பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் விரோதம் கேரளத்தில் அவ்வளவாக இல்லை. (குறைபட்ட ஆராய்ச்சி—அந்த உறவு முறை கேவலமானது—இழிவானது — மானக்கேடானது! பார்ப்பனீயக் கொடுமை அப்பகுதியில்தான் அதிகம். அதனால்தான் கிறிஸ்து மதம் அங்கு பலரை ஆட்கொண்டது. —ஆசிரியர்)

* * *

பார்ப்பனர்கள், கோயில் குருமார்களாக இருந்தார்கள்; மதச் சடங்குகளிலும் திருவிழாக்களிலும் அவர்கள் கலந்துகொள்வது பெருமையெனக் கருதப்பட்டது தென்னிந்தியாவில், ஆங்கிலேயர் ஆதிக்கம் பெற்று, அவர்களும், கிறிஸ்துவ மதகுருமார்களும்

சேர்ந்து துவக்கிய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இவர்கள் பெருவாரியாகச் சேர்ந்து, ஆங்கிலம் பயின்று, கிழக்கிந்தியக் கம்பெனியிலும், பின்னர் தோன்றிய ஆங்கில ஆட்சியிலும் ஏராளமான பதவிகளில் அமர்ந்தனர்.

அதிகாரஏணியின், மேல் படிகளில் ஆங்கிலேயர் அமர்ந்திருந்தாலும், பொது மக்களுக்குத் தொடர்புள்ள பதவிகளிலெல்லாம் பார்ப்பனர்கள் அமர்ந்திருந்தார்கள்.

வட இந்தியாவிலுள்ள இந்தி வெறியர்கள், இனி தென்னாட்டில் ஏற்பட இருக்கும் அரசியல் நெருக்கடியை உத்தேசித்தாவது, இந்தி பிரசாரத்தை இதமாகச் செய்ய வேண்டும்.

சில வடஇந்திய அரசியல்வாதிகள்..................கருத்துக் குருடர்களாகவும், குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள் ராஜாஜியால் மறைமுகமாக ஜாதியை நிலைநிறுத்தக் கொண்டுவரப்பட்ட வருணாச்சிரமக் கல்வித் திட்டமும், துரிதமான இந்தி நுழைப்பும்தான் காங்கிரசை ஒழித்துக்கட்ட, கையாளக்கூடிய சிறந்த கருவிகளாக...... அமைந்தன.

### எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிய சர். சி. பி.

[1]938-ல், மற்றும் ஒரு முக்கிய [சம்]பவம், தென்னிந்தியா[வில்] பார்ப்பன துவேஷத் தீயில் [எண்ணெ]ய்யை வார்த்தது. திருவாங்[கூரி]ல் சர். சி. பி. ராமசாமி அய்[யர் ப]தினைந்து ஆண்டுகளாக [ச]ர்வாதிகாரம் செலுத்தி வந்தபோது, அவர் ஒரு குள்ள மனம் படைத்த பிராமணராயும், ஆட்சியைப் பிராமணரின் வேட்டைக்காடாக்கி, பார்ப்பனரல்லாதாரை நசுக்கி ஆள்பவராயும் இருக்கிறார் என்பதற்காக, அவருக்குப் பூரண ஆதரவு தந்தது, பொதுவாக தென்னிந்திய பிராமணர்கள்! அதிலும்— சிறப்பாகத் தமிழ் நாட்டுப்

பார்ப்பனர்கள் செய்த மாபெரும் மடத்தனம்.

சர். சி. பி. யின், பார்ப்பனரல்லாதாரை நசுக்கும் வெறியும், பார்ப்பனரல்லாதார் திருவாங்கூர் ஸ்டேட் காங்கிரஸின் தலைவரைக் கொலை செய்ய முயன்றது... [illegible] பார்ப்பன துவேஷம் திருவாங்கூரிலும் பரவியது.

மகாத்மா காந்தியின் படுகொலைக்குப் பின்னர் தென்னிந்தியாவில். சிறப்பாகத் தென் கன்னட ஜில்லாக்களில்—அந்த சதியில் சம்பந்தப்பட்டுக் கைது செய்யப்பட்ட பலர் பார்ப்பனர்கள் என்று தெரிந்தபடியால் பார்ப்பன துவேஷம் உக்கிரமாக இருந்தது.

இராஜகோபாலாச்சாரியார் போன்ற அரசியல் கிர்வாகிகளை, கட்சிக்காக அவர்கள் செய்த பழைய தியாகங்களுக்காகத்தான் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓ. பி. ராமசாமி ரெட்டியார்தான் சென்னையில் காங்கிரஸ் ஆட்சியில் முதல் மந்திரியாக வந்த முதல் பிராமணரல்லாதார். 1951—1952-ல் நடந்த பொதுத் தேர்தலில் திராவிடர் இயக்கம் தன்னுடைய கொள்கைகளை விளக்கித் தேர்தலில் பங்கு கொள்ளவில்லை.

இராமசாமி நாயக்கரின் திராவிட கழகமும், அவரது சீடராம் சி. என். அண்ணாதுரையால் நடத்தப்படும் திராவிட முன்னேற்றக் கழகமும், பல கட்சிகளையும் சார்ந்த பெருவாரியான பிராமணரல்லாத அபேட்சகர்களை ஆதரித்தன. இந்த இரண்டு ஸ்தாபனங்களின் ஆதரவு பெற்ற அபேட்சகர்கள் பொதுவாகத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றனர்.

அண்ணாதுரையின் திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட கழகத்தின் "பார்வர்ட் பிளாக்" கட்சியாகும்.

அண்ணாதுரை, தமிழில் அதி உன்னத எழுத்தாளர். இந்த இரண்டு கழகங்களும் விதிக்கும் கட்டளைகளை தென்னிந்திய மக்கள், சிறப்பாகத் தமிழ் மக்கள் அனைவரும் ஏற்று செயலாற்றுகிறார்கள், ஆகையினால்தான் பெரும்பாலோர் மத சம்பந்தமான சடங்குகளுக்குப் பார்ப்பனர்களை அழைப்பதில்லை.

ஜஸ்டிஸ் கட்சி, ஆட்சியில் இருந்தபோது பார்ப்பனரல்லாதார் இயக்கம் சென்னை மாகாணம் பூராவும் ஒளி பெற்று விளங்கிய நிலையை அறிந்த நாகபுரியைச் சேர்ந்த மராட்டிய பார்ப்பனரொருவர், தென்னாட்டில் வளர்ந்துள்ள பார்ப்பனரல்லாதார் இயக்கத்தினால், பிற்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களைப் பெரிதும் உணர்ந்தார். 1924-ல், பானகல் ராஜா, மான்ட்போர்டு சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் சென்னை ராஜ்யத்தின் முதல மந்திரியாக இருந்து ஆட்சி செலுத்திவந்தார். அப்பொழுதுதான் மேலே குறிப்பிட்டுள்ள டாக்டர் ஹெட்ஜ்வார் என்ற பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் வளர்ச்சி கண்டு, அதைத் தடுக்காவிடில், அது இந்திய அரசியலிலேயே புகுந்துவிடக்கூடுமென்று கருதினார்.

(தொடரும்)

## 'தென்னிந்திய மொழிகளை, திராவிட மொழிகள் என்பதே பொருத்தமானது'

அகமதாபாத், நவ. 8—"சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள கீழை நாட்டுக் கலை ஆராய்ச்சி மன்றத்தை, மிகக் குறைந்தகால அளவில், தென்னிந்தியாவிலுள்ள மாநில அரசாங்கங்கள், மத்திய அரசாங்கம் ஆகியவற்றின் உதவியைக் கொண்டு, திராவிடக் கலைகள் சம்பந்தமான ஒரு பெரிய கழகமாக வளர்த்து, இந்திய நாட்டுக் கலாச்சாரத்திற்குப் பெரும் சேவை செய்வது சாத்தியமா என்பது பற்றி நான் சிந்தித்து வருகிறேன்," என்று, சென்னைப் பல்கலைக் கழக இந்திய வரலாற்றுத் துறைத் தலைவர் டி. வி. மகாலிங்கம் அவர்கள் அகமதாபாத்தில் நடைபெற்ற அனைத்து இந்திய கீழை நாட்டுக் கலை மாநாட்டின் கலாசாரப் பகுதிக்குத் தலைமை வகித்துச் சொற்பொழிவாற்றியபோது கூறினார்.

"தென்னிந்தியாவில் பேசப்பட்டு வரும் மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய மொழிகளைக் குறிப்பிடத் 'திராவிட மொழிகள்' என்ற தொடரே சரியானது ஆகும். இம்மொழிகள் யாவற்றுள்ளும் தமிழே மிக மிகப் பழமை வாய்ந்ததாகும். கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்திலேயே தமிழ் சிறப்புற்று விளங்கி வந்துள்ளது என்பது தெரிகிறது. கி. பி. 1019—1061-ல்தான் முதன் முதலில் தெலுங்கில் நன்னயாவின் 'பாரதம்' என்ற இலக்கியம் தோன்றியது. கன்னட மொழியும், தெலுங்கு மொழி சிறப்புற்று விளங்கிய காலத்திலிருந்தே விளக்கமுற்று வந்துள்ளது. தென்னிந்திய மொழிகளிலேயே மிகவும் சமீபத்தில் தோன்றிய மொழி, மலையாளம்தான்" என்றும் அவர் பேசினார்.

அவர் மேலும் பேசுகையில், சமஸ்கிருதம் போன்ற மொழிச் சொற்கள் தமிழில் வந்து கலந்ததைப் பற்றிக் குறிப்பிட்டார். திராவிட மொழிகளிலுள்ள கையெழுத்துப் பிரதிகளை நல்லமுறையில் பதிப்பாக்க வேண்டுமென்றும், திராவிட இலக்கிய வரலாறு ஒன்று தேவையென்றும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழகமெங்கும் 'தூத்துக்குடி வாரம்'

✯

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க, 'தூத்துக்குடி வாரம்' கொண்டாடி, அந்தக் கூட்டத்தில், "தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யுமாறு சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி, அதை சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியாருக்கு அனுப்பியும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று; தூத்துக்குடி தோழர்களை விடுவிக்கக்கோரும் மனு ஒன்றை தயாரித்து, அதில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பியும் உள்ள கழகங்களின் பட்டியலும், நிகழ்ச்சியின் சுருக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. தீர்மானங்களும், கோரிக்கையும், கையொப்பத் தாளும் ஒரே நிகழ்ச்சியின் சம்பந்தப்பட்டவையாதலால். தீர்மானங்களைத் தவிர்த்து, கூட்ட நிகழ்ச்சிகளை மட்டும் பிரசுரித்துள்ளோம்.

### கோவை

6—11—53ல், கோவை பாண்டியன் படிப்பகத்தின் செயலாளர் வி. துரைசாமி தலைமையில் தோழர் சி. டி. பி. தமிழ்மணி, ம. முனுசாமி, மற்றும் பல தோழர்கள் பேசினர்.

### கள்ளிவலசு

6—11—53ல், பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக்கூட்டம் தோழர் எஸ். எஸ். மணி தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்கள் எம் என். மணி, எம். சுப்புராம், ப குறள்தாசன் ஆகியோர் பேசினர்.

### மாயூரம் வட்டம்—காளி

6—11—53ல், தி. மு. க கிளைக் கழக செயற்குழு கூட்டம் தோழர் எஸ். கே. எம். சாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு ரூ. 5 அனுப்புவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### வடக்கநேந்தல்

இவ்வூர் பஞ்சாயத்து போர்டு கூட்டம் 6—11—53 வெள்ளியன்று தலைவர் தோழர் டி. வி இளையா பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அதுபோது, துணைத் தலைவர் க. பெ செழியன் 'தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யக் கோரிக்கொண்டுவந்த தீர்மானம் தோழர் மாரியப்ப பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

### வருசாம்பட்டி

6—11—53ல், இவ்வூர் தி மு கழக சார்பில் "தூத்துக்குடி வாரம்" தோழர் செ. ரியண்ணன தலைமையில் நடைபெற்றது அதுபோது, தோழர்கள் சின்னையா, லிங்கப்பன் மற்றும் பல தோழர்கள் பேசினர்.

### பூக்குளம்

தி. மு. கழக சார்பில், தூத்துக்குடி நாள் கூட்டம், 6-11-53 தேதி தோழர் வி. சக்கரை தலைமையில் நடந்தது. தோழர் என் என். மகாலிங்கம் தூத்துக்குடி சதி வழக்கைப் பற்றி விவரமாகப் பேசினர்.

### தாத்தையங்கார்பேட்டை

6—11—53-ல், தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் சண்முகம் சோடா கடையில் தோழர் ச. அயோத்தி தலைமையில் கூடியது. அதுபோது 'தூத்துக்குடி' தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### க. புதுப்பட்டி

5—11—53-ல், இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில "தூத்துக்குடி நாள்" ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. கூட்டம் சுப்பிரமணியர் கோயில் திடலில் தோழர் என். அப்பாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்: எம். இரத்தினம், எம். அய்யாசாமி, எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ஆகியோர் பேசினர்.

### இடையகோட்டை

3—11—53-ல், தி. மு. கழக சார்பில், தோழர் கா. கு. இராமசாமி தலைமையில் கூடிய கூட்டத்தில், தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### வேலூர்

இந்நகர் கோட்டை மைதானத்தில், நகர தி. மு க. ஆதரவில் தோழர் பி ஏ துரை தலைமையில் தூத்துக்குடி வாரம் கொண்டாடப்பட்டது தோழர்கள்: புலவர் மணிஎழிலன், கருத்தோவியம், நெடுஞ் சேரலன், முகலை ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் பேசினர்.

### சேத்துப்பட்டு

5—11—53-ல், சென்னை 33-வது வட்டம் தி. மு. கழக செயற்குழு, உறுப்பினர் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள்: இன்னாசு, அமிர்தலிங்கன் ஆகியோர் தூத்துக்குடி சதிவழக்கைப் பற்றியும், கழக ஆக்க வேலையைப் பற்றியும் பேசியபின், தூத்துக்குடி, டால்மியாபுரம், சென்னை குளை தி. மு. கழகம் ஆகிய வழக்கிற்கு நிதி உதவத் தீர்மானித்தன.

### எழும்பூர் (சென்னை)

7—11—53-ல், சென்னை 9-வது வட்டம், எழும்பூர் தி. மு கழகப் பொது உறுப்பினர் கூட்டம், கருப்ப பணிமனையில் தோழர் வி. நல்லதம்பி தலைமையில் கூடியது. தோழர் டி. ஜி சாமி தி. மு. கழக மத்திய கழக அறிக்கையை வாசித்து விளக்கிப் பேசினர் தூத்துக்குடி வழக்குக்கு நிதி வசூலிக்க தோழர்கள்: டி. ஜி. சாமி, நெடுமாறன், சோழன், மு. சா. இளங்கோ, என். இராசன் ஆகியோர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

---

## சிறை மீண்டோருக்குப் பாராட்டு

திசையன்விளை, நவ. 6— ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து சிறை சென்று மீண்ட தோழர் பி. துரைராஜ் அவர்களுக்கு, 2—11—53-ல். வரவேற்பு ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு செல்வமருதூர் இராமச் சாவடியிலிருந்து ஒரு ஊர்வலம் புறப்பட்டு, பல முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று கழக மேடையை அடைந்தது இரவு 7 மணிக்கு சந்தியம்மன் கோயிலுக்கு மேல்புறம் உள்ள மைதானத்தில் செயலாளர் கே. பி தேசிகன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் அலி சேக் மன்சூர், எம். எஸ். இராமசாமி ஆகியோர் தி மு கழகம் நடத்திய போராட்டங்களை விளக்கியும், மாற்றுக் கட்சித் தோழர்களின் பொய்ப் பிரசாரத்திற்கு மறுப்பு கூறியும் சொற்பொழிவாற்றினர். தூத்துக்குடி தோழர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரியும், அவர்கள் மீதுள்ள சதி வழக்கை வாபஸ் பெறுமாறு சென்னை முதலமைச்சரை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## செங்குன்றம் தி. மு. கழகம்

### பொது உறுப்பினர் தேர்தல்

1—11—53-ல் தி. மு. கழகக் கிளைக் கழக பொது உறுப்பினர் கூட்டம், தோழர் ப. பாலன், எ., தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் ப. செகந்நாதன் செயலாளராகவும், கு கோவிந்தன் துணைச் செயலாளராகவும், என் வெங்கடாசலம் பொருளாளராகவும், சி கே. சாமி, என வெங்கடேசன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், செயற் குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் ந. வெங்கடேசன், ஏ கோவிந்தராசன், ப. சுந்தரமூர்த்தி, டி. சாலமோன், வி என். கிருஷ்ணமூர்த்தி, ந. கோதண்டன, வே. ப. துரைராசன், ஜி குப்பன், கே பி. கமலக்கண்ணன், காட்டையன், மாதங்கப் பிரகாசம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

## பிரிவுபசாரம்

வாணியம்பாடி, நவ. 6— 1—11—53-ல் அஞ்சலக ஊழியர் தோழர் ஹபீஸ் அவர்களை, தந்திப் பயிற்சி பெற சென்னை செல்வதை முன்னிட்டு சக ஊழியர்கள், டாக்டர் அப்துல்லா தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் அஞ்சலகத்தில் நடத்தினர். அதுசமயம், தோழர்கள் சாந்தலிங்கம், வி இராமகிருஷ்ணன், சேசாத்திரி, பி. ஏ. ஆகியோர் பிரிந்துசெல்லும் தோழரைப் பாராட்டிப் பேசினர். தேநீர் விருந்துக்குப்பின் கூட்டம் இனிது முடிவுற்றது என்று, செயலாளர் வை. இராமகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

---

## கடலுக்கடியில் எண்ணெய் ஊற்று

லண்டன், நவ. 10— பாரசீக வளைகுடாவில் கடலுக்கடியில் 300 அடி ஆழத்தில் எண்ணெய் ஊற்றுகள் இருக்குமா வென்று கண்டுபிடிக்க பிரெஞ்சு நீச்சல் நிபுணர் ஒருவர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

மூச்சுப்பை சாதனம் ஒன்றைப் பொருத்திக் கொண்டு இவர் கடலில் இறங்குவார்.

எண்ணெய் ஊற்றைக் கண்டுபிடிக்க இவரை பாரசீக சர்க்கார் ஆதிக்கத்திலிருக்கும் ஆங்கிலோ—ஈரான் கம்பெனி அழைத்திருக்கிறது. —ரேபன்

---

## அரூர் பஞ்சாயத்து போர்டு கூட்டம்

### உறுப்பினர்கள் வெளியேற்றம்

அரூர், நவ. 9— 31—10—53-ம் தேதி காலை அரூர் பஞ்சாயத்து போர்டு கூட்டம் தோழர் எஸ். எஸ். வி கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் முனுசாமி தூத்துக்குடி, கல்லக்குடி அடக்குமுறைப் போக்கையும், புதிய கல்வித் திட்டத்தையும் கண்டித்து தீர்மானங்கள் கொணர்ந்தார். இதைத் தலைவர் கோவிந்தசாமி எதிர்த்தார். அதோடு, தீர்மானங்களை மற்ற அங்கத்தினர்களின் ஆய்வுக்குவிட மறுத்தார்.

எனவே, துணைத் தலைவர் கோவிந்த செட்டி, டாக்டர் எம். சி பசலுதீன், எம். கே வேணுகோபால், கே. ராசமாணிக்கம், ஏ. முனுசாமி, ஏ.: அண்ணாமலை ஆகியோர் வெளியேறினர்.

---

## "தேனருவி"

நவம்பர் 4-ம் தேதியன்று "தேனருவி" என்ற இலக்கிய மாதப் பத்திரிகையின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் ஆர். எச். கிருஷ்ணமூர்த்தி, மதுரை விசேஷ உதவி கலெக்டர் டி இ. தியாகராஜபிள்ளை முன்னிலையில் தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

---

### ஆசிரியருக்குக் கடிதம்

## வடக்கும்-தெற்கும்

ஆசிரியர்: "நம் நாடு"
சென்னை.

ஐயா,

கடந்த சில மாதங்களுக்கு முன்பு திருத்தணியில் தமிழர்கள் போராட்டம் நடத்திய பொழுது அதை 'முட்டாள்தனம்' என்று நேரு கண்டித்தார். அதை கண்டிக்கும் முறையிலே ஜூலை 15 ந் தேதி தி மு.கழகத் தோழர்கள் ரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஏறத்தாழ ஐயாயிரம் தோழர்கள் சிறைப்படுத்தப்பட்டனர், ஆறு உயிர்களைப் பலி கொடுக்க நேரிட்டது, ஆச்சாரியார் ஆட்சிக்கு! முக்கியமான தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். நேரு அவர்கள் சென்னைக்கு வந்தபோது அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக ஜனநாயக முறைப்படி கருப்புக்கொடி காட்டப்பட்டது; அதைக்கண்ட நேரு ஆத்திரமேவிட்டு, மறுபடியும், "காட்டுமிராண்டிகள், முட்டாள்கள், காட்டுமிராண்டிகளைவிட மோசமானவர்கள்" என்றும், வசை பாடிச் சென்றார்.

கடந்த ஒரு வாரகாலமாக, லட்சுமணபுரி, லக்னோ முதலிய இடங்களில், கலாசாலை மாணவர்கள், போராட்டத்தைத் துவக்கி 800-க்கு மேற்பட்ட டெலிபோன் இணைப்புகளைச் சேதப்படுத்தியும், 6 அஞ்சல் நிலையங்களைக் கொளுத்தி சாம்பலாக்கியும், கவர்னர், மந்திரிகளுக்குக் கொடும்பாவி கட்டி இழுக்கும் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள்.

தான் பிறந்த மாகாணத்திலேயே இவ்விதமான அட்டூழியங்கள் நடைபெறுவதைப்பார்த்தும்கூட, நேரு அவர்கள் ஒரு சாதாரண கண்டனத்தைக்கூடத் தெரிவித்திருக்கிறாரே யொழிய, நம்மை ஏசியதுபோல் காட்டுமிராண்டிகள் என்றோ, முட்டாள்கள் என்றோ, அறிவில்லை என்றோ கண்டிக்கவில்லை. அரசியல் காரணத்துக்காக நடத்தப்பட்ட போராட்டங்களை, முட்டாள்தனம் என்று சொன்ன நேரு கலாசாலையில் ஏற்பட்ட பிணக்கினால் இவ்வித அட்டூழியங்கள் செய்தவர்களை நம்மைத் திட்டியதைவிட அதிகமாக அல்லவா திட்டியிருக்க வேண்டும்? இதில்கூட, 'வடநாடு — தென்னாடு' என்ற வேற்றுமையா? தெற்கின் போராட்டங்கள் மோசமானது என்ற பொருளுக்கிறார்களே தேசியம் பேசும் தேசியத் தோழர்களைச் சிந்திக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

எம். எஸ். பிரகலாதன்,
கிருஷ்ணகிரி,
5—11—'53

---

### புராதன கால மீன்கள்!

தாரஸ்ஸலாம், நவ. 10— பல லட்சம் ஆண்டுகளுக்கு முன் இருந்துவந்த மீன் வர்க்கத்தைச் சேர்ந்ததெனக் கருதப்படும் 'சோயல் கந்த்' என்ற மீன்களை இத்தாலிய விஞ்ஞானிகள் தண்ணீருக்குள் சென்று போட்டோ பிடித்துள்ளனர்.

* * *

### எதற்காக வருகிறார்?

லண்டன், நவ 10— முன்னாள் சயாம் பிரதமர் டாக்டர் ஜகன் இந்தியாவுக்கு விஜயம் செய்வது பண்டித நேருவின் ஆலோசனைகளைக் கேட்பதற்காகத்தான் என்று தெரிகிறது. டாக்டர் ஜகனின் பிரிட்டிஷ் விஜயம் பெரும் ஏமாற்றத்தை அளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

* * *

வாஷிங்டன், நவ. 10— அமெரிக்கா, ஹைட்ரஜன் குண்டை வெடிக்க ஆயத்தங்கள் செய்து கொண்டிருப்பதாக அதிகாரபூர்வமில்லாத செய்திகள் கூறுகின்றன. ஜனவரியாக் அல்லது பிக்னியில் இக்குண்டு வெடிக்கப் படலாமாம்.

---

## "நம் நாடு" சந்தாதாரர்கட்கு

"நம் நாடு" சந்தாதாரர்கள் முகவரிக்கு மேலே சந்தா எண் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சந்தா முடிவடையும் தேதியும் முகவரிக்கு அடியில் குறிப்பிட்டிருக்கின்றோம்.

சந்தா முடிவடையும் தேதிக்கு சந்தா எண் குறிப்பிட்டு (முன்னர்) மணியார்டர் அனுப்பினால், முடிவடைந்த தேதியிலிருந்து புதுப்பித்துக்கொண்டு, "நம் நாடு" இதழ் அனுப்பிவைக்கின்றோம்.

சந்தா அனுப்பும் தோழர்கள், குறைந்தது மூன்று மாதங்கட்காகிலும் சந்தாத் தொகை அனுப்பினால், முகவரியை அச்சடித்துக்கொள்ள சௌகரியமாயிருக்கும்.

1 மாத சந்தா மணியார்டர் அனுப்பி, அதையும், 2, 3 தடவை முகவரி மாற்றி, திருத்தம் எழுதிக்கொண்டிருந்தால் நிர்வாகத் திற்குத் தொல்லை தருவதாகும்.

"நம் நாடு" சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கலாம். "நம் நாடு" பத்திரிகையை வி. பி பி. யில் அனுப்புவதற்கில்லை. உள்நாடு, வெளிநாடு சந்தா விகிதத்தைப் பார்த்துக்கொண்டு, மணியார்டர் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

**சந்தா கட்டணம்:**

உள்நாடு:

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 24-0-0 |
| ஆறு மாதம் | 12-0-0 |
| மூன்று மாதம் | 6-0-0 |

வெளிநாடு

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 30-0-0 |
| ஆறு மாதம் | 15-0-0 |
| மூன்று மாதம் | 7-8-0 |

தனிப்பட்ட நபர்கள் பெயருக்கு, மணியார்டர், டிராப்டு போஸ்டல் ஆர்டர் அனுப்பிவைக்காமல், பொறுப்பாளர், "நம் நாடு" இராயபுரம், சென்னை-13 முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

பொறுப்பாளர்,
"நம் நாடு,"
இராயபுரம், சென்னை-13.

---

## அனுதாபங்கள்

சென்னை, நவ. 10— தி மு. கழகத் தொண்டரும் சவுந்திர பாண்டியன் படிப்பக நிர்வாக உறுப்பினருமான தோழர்கள் எம். சோழன், வீரராகவலு ஆகியோரின் தந்தை முருகேசன் அவர்களின் மறைவுக்கும், தி மு. கழக நிர்வாக உறுப்பினர் தோழர் என். சிவசேசன் அவர்கள் தந்தையின் அகால மரணத்திற்கும் சென்னை எழும்பூர் 9-வது வட்ட தி. மு. கழகம், ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

* * *

கரூர், நவ. 10— கரூர் தோழர் கே. முத்துசாமி அவர்களின் துணைவியார் 3—11—53-ல், இயற்கையெய்தினார். துணைவியின் பிரிவால் துக்கப்படும் தோழருக்கு, கரூர் தி. மு. கழக சார்பில, ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என எஸ். கே. கரிகாலன் அறிவிக்கிறார்.

---

டமாஸ்கஸ், நவ. 10— இங்கு நடைபெற்ற விருந்தில் கெட்டுப்போன மாமிச உணவை உண்ட 74 பேர்கள் நோயுற்றிருக்கின்றனர். இதுவரை யாரும் இறக்கவில்லை.

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.